[1979 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ), (ஆ), மற்றும் (இ) விரிவான *அறிக்கை- ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மருதாசலம் : வைக்கப்பட்ட அறிக்கையைப் பொறுத்த அளவில் மதுரை நகரைப் பொறுத்து வைத்திருக்கிறார்கள்: மதுரையைப் போலவே பல்வேறு மாவட்டங்களில் முக்கியமான நகரங்கள் இருக்கின்றன . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி மதுரையைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அறிக்கையும் மதுரையைப் பற்றித்தான் இருக்கிறது.

நரிக்குடி குடிநீர்த் திட்டம்.

* வினா எண் 709 — திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வைகை ஆற்றிலிருந்து குழாய்களின் மூலமாக நரிக்குடிக்கு குடிநீர் கொண்டு செல்ல நரிக்குடி குடிநீர்த் திட்டம் ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும்?

(இ) அத் திட்டத்தினால் பயனடையும் கிராமங்கள் யாவை? எத்தனை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஜூலை 1979க்குள்.

(இ) கொட்டகாய்ச்சி ஏந்தல்
கிழவிக்குளம்
கீழ்கொன்றைகுளம்
முள்ளிக்குடி
ஆண்டியேந்தல்
டி. கடம்பன்குளம்
பிடாரிசேரி
வள்ளாக்குளம்
கே. புதுக்குளம்
அரிமண்டபம்
எஸ். கரிசல்குளம்
ராஜாக்கால் குடியிருப்பு

ஆகிய 12 கிராமங்கள்.

---

*739–740-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.